بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/02/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் அவர்களுடைய இறைவணக்கத்தின் உள்ளங்கவரக்கூடிய, ஈமானை வலுப்படுத்தக்கூடிய குறிப்புகள்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝٦ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝٧

அல்லாஹ்வின் அருளால், நேற்று ரமலான் தொடங்கியது. அல்லாஹ்வுடன் சிறப்பான தொடர்பை ஏற்படுத்துவதற்கும் நமது ஆன்மிக வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இந்த நோன்பு மாதத்தை அல்லாஹ் வழங்கியுள்ளான். இந்த மாதத்திலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் மிக அதிகமாக பயனடைய அல்லாஹ் உதவுவானாக. ஆனால், ரமலானுக்குப் பிறகும், அல்லாஹ்வின் மீது அன்பு மற்றும் இறைவணக்கத்தின் தரங்களைப் பேணி, அவற்றை உயர்த்த முயற்சிக்கும் போதுதான் உண்மையான நன்மை கிடைக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

கடந்த சில ஜுமுஆக்களில் மாநபி (ஸல்) அவர்களின் இறை நேசம், இறை வணக்கங்களின் முறை, உயர் நிலைகள் மற்றும் அதைப் பின்பற்ற முஃமின்களுக்கு வழங்கிய அறிவுரைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் பற்றி நான் உங்களுக்குக் கூறி வருகிறேன். பின்னர், அன்னாரது அழகான முன்மாதிரியை உண்மையாகப் பின்பற்றும் அடியார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சம்பவங்களை விவரித்தேன். எனவே இந்தத் தலைப்பு இன்னும் தொடர்கிறது. இன்று ராமலனை முன்னிட்டும் இதுவே தொடரும்...

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நாம் இந்த வரலாற்றை செவியுற்றோம், பாதுகாத்தோம் என்று மட்டும் இல்லாமல் இவை நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சம்பவங்களில், ஹஸ்ரத் மௌலவி முஹம்மது அப்துல்லாஹ் பட்டாலவி சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு கூற்று தொடர்பாக, ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் அறிவிப்பை எடுத்து வைத்து, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* .......ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு அல்லாஹ்வுடனான தொடர்பு, இறையச்சம், தூய்மை மற்றும்

இறைவணக்கத்தில் ஆர்வம் ஆகியவை இதில் தெளிவாகத் தெரிகின்றன. ஆகையால்தான் இதை நான் கூறுவது அவசியம் எனக் கருதுகிறேன்.

அமத்துர் ரஹ்மான் சாஹிபா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்கள் கண்களை மூடிக்கொண்டு காகிதத்தில் எழுத முடியுமா இல்லையா என்று ஒரு பரிசோதனை செய்ய விரும்பினர். எனவே, அந்த காகிதத்தை எடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் அதில் இந்த வாக்கியத்தை எழுதினார்கள். அது எனக்கு எழுத்துக்கு எழுத்து நினைவில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை அவர்கள் கண்களை மூடிக்கொண்டு எழுதியது என்னவென்றால், மனிதன் எப்போதும் இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும். மேலும், ஐவேளை அவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் எப்போதும் தம்மை பின்பற்றுபவர்களுக்குப் பின்பற்ற அறிவுறுத்திய தரநிலை இதுதான். என்னைப் பின்பற்றுபவர்கள், அல்லது ஒவ்வொரு முஃமினும் அல்லாஹ்வுக்கு அஞ்சி எப்போதும் இறைவணக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்ற ஒரே ஒரு எண்ணம் மட்டுமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுக்கு எப்போதும் இருந்தது.

இதே போன்று ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி (ரலி) அவர்கள் கூறியதாக, ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் 1884 இல் காதியானிலிருந்து வெளியே சென்று சில்லா (அதாவது, 40 நாட்கள் தனிமையில் இருந்து இறைவணக்கம்) செய்யவும், இந்தியாவின் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் முடிவு செய்தார்கள். எனவே அன்னார் (அலை) குருதாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள சுஜான்பூருக்குச் சென்று தனிமையில் இருக்க முடிவு செய்தார்கள். ஆனால் உம்முடைய நோக்கம் ஹோஷியார்பூரில் நிறைவேறும் என்று இல்ஹாம் இறங்கியது. எனவே அன்னார் ஜனவரி 1886 இல் ஹோஷியார்பூருக்குச் செல்வதற்கு முன்பு ஹஸ்ரத் அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டார்கள்.

ஹோஷியார்பூரின் ஷேக் மெஹர் அலீ ரயீஸ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, 'நான் இரண்டு மாதங்களுக்காக ஹோஷியார்பூருக்கு வர விரும்புகிறேன். நகரத்திற்கு ஒதுக்குப் புறமாக மேல் தளத்தில் ஒரு வீடு ஏற்பாடு செய்யுங்கள்' என்றார்கள். இதனால் அவர்கள் தவீளா என்ற பெயரில் பிரபலமாக இருந்த தமது ஒரு வீட்டைக் காலி செய்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கட்ட வண்டியில் அமர்ந்து பியாஸ் நதியை நோக்கிப் புறப்பட்டார்கள். மியான் அப்துல்லாஹ் சாஹிப், ஷேக் ஹாமித் அலீ சாஹிப் மற்றும் ஃபதே கான் ஆகியோர் உடன் இருந்தார்கள். ஆற்றைக் கடக்க ஒரு

படகு ஏற்பாடு செய்தார்கள். படகில் பயணித்துக் கொண்டிருந்தபோது, அன்னார் (அலை) என்னிடம், “மியான் அப்துல்லாஹ்! முழுமையானவரின் சகவாசம் ஒரு நதிப் பயணம் போன்றது, அதைக் கடக்கும் நம்பிக்கையும் உள்ளது; மூழ்கும் பயமும் உள்ளது” என்று கூறினார்கள். நான் ஹுஸூர் (அலை) அவர்களுடைய இந்தக் கூற்றை மேலோட்டமாக கேட்டுக் கொண்டேன். ஆனால் எப்பொழுது ஃபதேஹ் கான் முர்த்ததாக ஆனாரோ அப்பொழுது எனக்கு ஹுஸூர் (அலை) அவர்களுடைய கூற்று ஞாபகத்திற்கு வந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள், கையால் எழுதப்பட்ட பிரசுரம் மூலம் “நாற்பது நாட்களுக்கு யாரும் என்னைச் சந்திக்க வரக்கூடாது; யாரும் என்னை விருந்துக்கு அழைக்கக்கூடாது. இந்த நாற்பது நாட்கள் கடந்த பிறகு, நான் மேலும் இருபது நாட்கள் இங்கேயே தங்குவேன். இந்த 20 நாட்களில் சந்திப்புகளுக்கும், கேள்வி பதில்களுக்கும் அனுமதி உண்டு” என்று அறிவித்து விட்டார்கள். எங்களிடம், “வீட்டின் கதவு எப்பொழுதும் உள்பக்கம் பூட்டப்பட்டிருக்க வேண்டும். வீட்டிலும் யாரும் என்னை அழைக்கக்கூடாது. எவரும் மேலே வரக்கூடாது. தொழுகையும் நான் மேலயே நிறைவேற்றுவேன்” என்றும் கூறினார்கள். ஜுமுஆவிற்கு அன்னார் (அலை) கூறினார்கள்: ஏதாவது ஒரு வெறுமனே இருக்கக்கூடிய பள்ளிவாசலைத் தேடுங்கள். அது நகரத்தின் ஒருபக்கத்தில் இருக்கட்டும். அங்கு நாம் தனியாக சென்று தொழுது கொள்ளலாம்.

ஒருமுறை அன்னார் (அலை) என்னிடம் கூறினார்கள்: மியான் அப்துல்லாஹ்! இந்த நாட்களில் என் மீது இறைவனுடைய பெரும் பெரும் அருள்களின் கதவுகள் திறந்தன. மேலும் சில நேரங்களில் வெகு நேரம் இறைவன் என்னுடன் பேசிக் கொண்டிருந்தான். இந்த சம்பவங்களை எழுதினோம் என்றால் அவை பல பக்கங்களாக ஆகிவிடும். ஆகையால் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான இல்ஹாம்களும் இந்த சில்லாவில் தான் வந்தன. சில்லாவுக்குப் பிறகு, ஹோஷியார்பூரிலேயே அன்னார் (அலை) இந்த முன்னறிவிப்பை அறிவிப்பு செய்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* 20 பிப்ரவரி 1886 -ன் பிரசுரமாகும். ‘வாக்களிக்கப்பட்ட மகன் முன்னறிவிப்பு’ என்ற பெயரிலும் ஜமாஅத்தில் அறியப்படுகிறது.

இன்று பிப்ரவரி 20 ஆக இருப்பதும் ஒரு சிறப்பான தற்செயல் நிகழ்வாகும். இது வாக்களிக்கப்பட்ட மகன் முன்னறிவிப்பு மிகவும் மகத்துவத்துடன் முழுமை அடைந்த நாளாகவும் இருக்கின்றது. அந்த வாக்களிக்கப்பட்ட மகன் பிறந்தார். முன்னறிவிப்புக்கு ஏற்ப அவருடைய 52 ஆண்டுகால கிலாஃபத் இருந்தது. அல்லாஹ் அவருக்கு வெற்றிகளை

வழங்கினான். அதிலிருந்த அந்த அனைத்து முன்னறிவிப்புகளும் இல்ஹாம்களும் விஷயங்களும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் மீது முழுமை அடைந்தன.

இதைத் தற்செயல் நிகழ்வு என்று நான் ஏன் கூறுகின்றேன் என்றால், இந்த சம்பவம் இன்றே என் பார்வைக்கு வந்து விட்டது. இல்லையென்றால், முன் பின் கூட வந்திருக்கலாம். ஆனால் இன்றைய நாளே வரவேண்டும்; நானும் இதை எடுத்துக் கூறி விட வேண்டும் என்பதுதான் இறைவனுடைய நுட்பமான செயலாக இருந்தது. இதற்கான கூட்டங்களும் இன்றைய நாட்களில் ஜமாஅத்களில் நடைபெறுகின்றன. மேலும் அதிலிருந்து வரலாறும் தெரிந்து விடுகிறது. MTA விலும் நிகழ்ச்சிகள் வருகின்றன. அவற்றில் இருந்தும் நாம் வரலாற்றைத் தெரிந்து கொள்கின்றோம். அவற்றைப் பார்க்க வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அந்த நாட்களில் ஃபதேஹ் கான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மீது எந்த அளவிற்கு உறுதி கொண்டு இருந்தார் என்றால், அவர், 'ஹஸ்ரத் சாஹிப் அவர்களை நான் நபி என்று எண்ணுகிறேன்' என்று கூறுவார். ஆனால் அவருக்கு தடுமாற்றம் ஏற்பட்ட பொழுது அவர் மூர்த்தத் ஆகிவிட்டார்.

*இதையொட்டியே ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஆகையால் மனிதன் எப்பொழுதும் தன்னுடைய முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்று துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். தன்னுடைய ஈமானை உறுதியாக ஆக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக துஆவும் செய்ய வேண்டும். மேலும், சிறப்பான முறையில் ரமலானில் இந்த துஆவையும் செய்ய வேண்டும், ஒவ்வொருவரும் இந்த துஆவை செய்ய வேண்டும்: அல்லாஹ் நம்முடைய முடிவை நல்லதாக ஆக்கி ஈமானை வலுப்பெறச் செய்வானாக.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இதேபோன்று அன்னாருடைய தொழுகை தொடர்பான இன்னொரு சம்பவம் இருக்கின்றது. சில மக்கள் தொழுகையினுடைய மார்க்கச் சட்ட விவகாரங்கள் தொடர்பாகப் பேசுகின்றார்கள். எவ்வாறு கையைக் கட்ட வேண்டும், தொழுகையினுடைய பல்வேறு அசைவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றெல்லாம் கேட்கின்றனர்.

மியான் அலீ முஹம்மது சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களுடைய தொழுகையின் முறை பற்றி கூறுகின்றார்கள்: ஒருமுறை ஹுஸூர் அவர்கள் சுன்னத் தொழுவதைக் கண்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கைகளைத் தொப்புளுக்கு மேலே கட்டியிருந்தார்கள். வலது கையின் நடுவிரல் முட்டி வரை சென்றிருந்தது. சிறிது பின்னாலே இருந்தது என்றே சொல்ல வேண்டும். சஜ்தாவிற்கு செல்லும் பொழுது தம்முடைய இரண்டு கைகளுக்கு நடுவே நெற்றியையும் மூக்கையும் தரையில்

வைத்தார்கள். விரல்கள் நேராக காபாவை பார்த்தவாறு இருந்தன. கைகள் நேராக இருந்தன. அன்னார் (அலை) சஜ்தாவில் இருந்து எழும்போது, அன்னாருடைய தலைப்பாகை தளர்வாக இருந்ததன் காரணத்தினால், பின்னால் சென்று விடும் அதை விரலால் நேராக்கிக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் மாஸ்டர் நசீர் ஹுசைன் சாஹிப், அன்னாரது தஹஜ்ஜுத் தொழுகையின் தன்மையை விவரித்தவாறு எழுதுகிறார்கள்: நான் இரவு ஒரு மூன்று மணியளவில் ஹஸ்ரத் (அலை) அவர்களைக் கண்ட போது, ஹஸ்ரத் (அலை) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். நானும் உளூ செய்து ஹஸ்ரத் (அலை) அவர்களுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் தொழத் தொடங்கினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் செய்த அளவு நிற்கவோ, குனிந்து வணங்கவோ அல்லது ஸஜ்தா செய்யவோ மிகவும் முயற்சி செய்தேன். ஆனால் என்னால் முடியவில்லை. வெறும் இரண்டு ரக்அத்களிலேயே நான் மிகவும் சோர்வடைந்து போனேன். ஆனால், ஹுஸூர் (அலை) அவர்கள் நான் இணைந்த அதே ரக்அத்தில் இருந்தார்கள்.

பகலில், நாங்கள் ஹுஸூர் (அலை) அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்த போது, ஹுஸூர் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்குத் தஹஜ்ஜுத் தொழும்படி வலியுறுத்தினார்கள். தஹஜ்ஜுத் தொழுமாறு அறிவுறுத்தியபோது, நான் 'தஹஜ்ஜுத் தொழப்படாவிட்டால், குறைந்தபட்சம் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* 'தஹஜ்ஜுத் தொழவில்லை என்றால், என்ன செய்ய வேண்டும்?' என்று மக்கள் கேட்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள், "அந்த நேரத்தில், அதிகமாக இஸ்திக்ஃபார் ஓதுங்கள்! தஸ்பீஹ், தஹ்மீது அதிகமாக ஓதுங்கள். இதனால் பிறகு தஹஜ்ஜுத் தொழுவதற்கான பாக்கியம் கிடைக்கும்" என்றார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* அன்னார் கற்பித்த இந்தப் பிரார்த்தனைகள், தஹஜ்ஜுதுக்கு மாற்றாக ஆகி விடும் என்பதற்காக அல்ல; மாறாக, இவற்றின் மூலம் நமக்கு தஹஜ்ஜுத் தொழும் பாக்கியம் கிடைக்கும் என்பதற்காகவே ஆகும். எனவே சோம்பேறித்தனமான நாட்களில் நாமும் பின்பற்ற வேண்டிய வழிமுறை இதுதான். தற்பொழுது நாம் ரமலானைக் கடந்து கொண்டிருக்கிறோம். தஹஜ்ஜுத் தொழுவதில் நமக்கு ஓரளவு வாய்ப்பு கிடைக்கும். அவ்வாறு இல்லை என்றாலும் முயற்சி செய்ய வேண்டும். பள்ளிவாசல்களில் தராவீஹ் தொழ வைக்கப்படுகின்றது. இது அதற்குப் பகரமாக இருக்கின்றது. பலவீனமான நோயாளிகள் அல்லது காலையில் எழ முடியாத மக்களுக்கு குறித்த நேரத்தில் அல்லது அதிகமான நேரம் ஒதுக்க முடியாதவர்களுக்காக

ஆகும். ஆனால் இது அதற்கான சரியான பகரம் கிடையாது. அது முழுவதுமான உரிமையை செலுத்தாது.

இரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுவதுதான் மாநபி (ஸல்) அவர்களின் சுன்னத்தும் ஆகும்; அன்னாரின் உண்மை அடியாரின் நடைமுறையும் ஆகும். எனவே ஒருவர் தராவீஹ் தொழுதிருந்தாலும், இரண்டு அல்லது நான்கு நஃபில் தொழுகைகளே ஆனாலும்சரி, கண்டிப்பாக தஹஜ்ஜுத் தொழ முயற்சி செய்ய வேண்டும்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:-* **ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உலக விவகாரங்களை முழுவதும் கைவிடக்கூடாது. இறைவன் உங்களுக்கு வழங்கிய அருள்களுக்கு மதிப்பளியுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் சொந்த சூழ்நிலைகளைப் பார்க்க வேண்டும். உலகில் முழுமையாக மூழ்கி விடக்கூடாது. உலக உரிமைகளும் பறிக்கப்படும் அளவுக்கு உலகத்தைத் துறந்து விடக்கூடாது. எனவே இஸ்லாத்தின் நடுநிலையான போதனை உள்ளது. அதை மேற்கொள்ள வேண்டும்.**

*குத்பா சானியாவுக்கு முன்பு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அருளுக்குரிய ரமலான் மாதத்தையொட்டி, இறை வணக்கத்தின் உரிமையை செலுத்துதல் பற்றியும், அநீதிக்குள்ளான அஹ்மதிகள், இறைவழியில் சிறை சென்றவர்கள் மற்றும் இஸ்லாமிய உம்மத்திற்காகவும், உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றவும் குறிப்பாக துஆ செய்யுமாறும் வலியுறுத்தினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)**